திரு. க. இராமமூர்த்தி : எந்தெந்தத் தொழிற்சாலைகளில் சிறுவர்கள் களைப் பணிக்கு வைக்கும் நிலை அதிகமாக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். எந்தெந்த மாவட்டத்தில் இந்த நிலை இருக்கிறது? தனியாக இதுபற்றி ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா ? அந்தக் குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் அதிகமாகக் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தவிர்க்க ஏதேனும் ஆலோசனையை அரசு பரிசீலனை செய்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கூடுமானவரையில் சிவகாசியில் உள்ள மத்தாப்பு, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில்தான் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்று புகார்கள் வருகின்றன. எனவே அங்கேயே அலுவலர்களை நியமித்து, அது பற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அது போதாது என்று சொல்லி என் தலைமையிலே உள்ள குழுக் கூட்டம் நடந்தபோதுகூட, ஒரு கருத்து சொல்லப்பட்டது. அந்த நேரத்தில் ஒவ்வொரு தொழிற்சாலையாகச் சென்று, பரிசீலனை செய்த உறுப்பினர்கள், அங்கே சிறுவர்கள் வேலை செய்கிறார்களா என்று பரிசீலிக்கச் சென்ற உறுப்பினர்கள், தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு வந்த பிறகு, குழுக் கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "இப்போதுதான் பார்த்தோம், எனவே உடனடியாக அஜெண்டாவுக்கு சப்ஜெக்ட் கொடுக்க நேரமில்லை, அடுத்த கூட்டத்திற்கான அஜெண்டாவுக்கு சப்ஜெக்ட் தருகிறோம்; அப்போது இதைப்பற்றி விவாதிக்கலாம்" என்று சொன்னார்கள். என்னோடு வந்த உறுப்பினர்கள் எல்லாம் நன்றாகச் சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். எனவே அடுத்த கூட்டத்திற்கு 'சப்ஜெக்ட்' அனுப்புவார்கள். அது குறித்து விவாதம் நடந்த பிறகு, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

Drinking Water to Madurai from Vaigai Dam.

* *Q.* DR. T. R. JANARTHANAM : (on behalf of Thiru D. Santosham) : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to bring drinking water to Madurai from Vaigai Dam; and

(*b*) if so, the details thereof ?

REPORTING SE
(Council)

1984 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(இ) ரூ. 32.51 கோடி செலவில் உலக வங்கியின் கடனுதவியுடன் மதுரை மாநகருக்குத் தேவையான குடிநீரை வைகை நதியிலிருந்து கொண்டு வரும் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப் பட இருக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் உலக வங்கியின் ஒப்புதல் பெற்ற பிறகே 1984-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தொடங்கப்பெற்று சுமார் நாலரை ஆண்டுகளில் முடிக்கப்படும்.

வெளிநாடுகளில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களைத் திறத்தல்.

17. **வினா**—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் (திரு. ஏ. ஜே. தாஸ் சார்பில்) மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெளிநாடுகளில் கோ-ஆப்டெக்ஸ் (Co-optex) விற்பனை நிலையங்களை திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) இல்லை. ஏற்கெனவே சிங்கப்பூரில் ஒரு விற்பனை நிலையம் கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் மூலம் ஏற்பட்டு, இயங்கி வருகிறது. சென்ற ஆண்டு ஏற்றுமதி ஒரு கோடி ரூபாய் வரையில் இருந்தது. இந்த ஆண்டு ஏற்றுமதி சுமார் 1¼ கோடி ரூபாய் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : அமெரிக்க நாட்டிலும், ஐரோப்பிய நாடு களிலும் கோவாப்டெக்ஸ் துணிகளுக்கு நல்ல கிராக்கி இருப்பதாகச் சொல் கிறார்கள். ஆகவே அந்த நாடுகளிலே விற்பனை நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : சிங்கப்பூரில் சென்ற ஆண்டு ஒரு கடையை ஏற்படுத்தி இருக்கிறோம். அங்கிருந்து மற்ற நாடுகளுக்கு கைத் தறித் துணிகள் அனுப்பப்பட்டு வருகின்றன. தற்போது வேறு நாடுகளில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்துகிற யோசனை எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.